-85-

THE NEW INDIAN EXPRESS

TUESDAY 28.11.2023

# Collector postpones public hearing for mine expansion in Ariyalur

EXPRESS NEWS SERVICE @ Ariyalur

AFTER a TNIE report on Ariyalur farmers' opposition to a public hearing on a government cement plant's mine expansion plan, Collector J Anne Mary Swarna postponed the hearing which was scheduled to be held on November 28.

TNIE IMPACT

The report highlighted how Tamil Nadu Cements Corporation Limited acquired about 1,000 acres of land from around 300 farmers as part of its limestone mining expansion plans.

Before the public hearing could take place, farmers, who parted with their lands, came forward saying the hearing would dim their prospects of receiving revised compensation.

Following the report, posters sprung up in several places about a hunger strike by farmers in Vilangudi village on Monday.

The collector met the farmers before the protest and later postponed the public hearing due to "administrative reasons".

> **We have been waiting for years for the compensation. The hearing must be held only after giving us our due relief**
>
> S Muruganadham, Farmer

S Muruganadham, a farmer from Nerinchikorai, told *TNIE*, "It gives us some relief that the collector heard our grievances and postponed the hearing. We have been waiting for years for the compensation. The hearing must be held only after giving us our due compensation."

தினமலர் | திருச்சி | 28.11.2023

# கருத்துக்கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு: கலெக்டர்

**அரியலுார்:** அரியலுார் அருகே உள்ள நெருஞ்சிகோரை, புதுப்பாளையம் வாலாஜா நகரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு அரியலுார் அரசு சிமென்ட் ஆலைக்காக ஆயிரத்து 200 ஏக்கருக்கு மேல் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டது. அப்போது கொடுத்த இழப்பீடு தொகை போதவில்லை என விவசாயிகள் அரியலுார் கோர்ட்டில் வழக்கு தொடுத்தனர். இந்நிலையில், இன்று சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைப்பதற்கான கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் நேற்று முதல் தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தனர். நேற்று காலை அதிகாரிகள் விவசாயிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். உரிய இழப்பீடு வழங்காமல் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தக்கூடாது என வலியுறுத்தினர். இதையடுத்து இன்று (28ம் தேதி) கருத்துகேட்பு கூட்டம் நடைபெற இருந்த நிலையில் நிர்வாக காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்படுவதாக கலெக்டர் ஆனி மேரி ஸ்வர்ணா தெரிவித்துள்ளார்.

திருச்சி 28-11-2023 ★

தினத்தந்தி

### அரசு சிமெண்டு ஆலை சுரங்கம் அமைக்க

# நிலம் கொடுத்த கிராம மக்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட முயற்சி

## கருத்துகேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

அரியலூர், நவ.28-

அரசு சிமெண்டு ஆலை சுரங்கம் அமைக்க நிலம் கொடுத்த கிராம மக்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட முயன்றனர். இதுகுறித்து அவர்களிடம் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் கருத்துகேட்பு கூட்டத்தை கலெக்டர் ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

### அரசு சிமெண்டு ஆலை

அரியலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் அரசு சிமெண்டு ஆலைக்காக புதுப்பாளையம், நெரிஞ்சிக்கோரை, பெரிய நாகலூர், அஸ்தினாபுரம், வாலாஜாநகரம், தாமரைக்குளம், சீனிவாசபுரம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த பொதுமக்களிடம் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனால் இதற்கு உரிய இழப்பீடு தொகை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட கிராம மக்கள் கோர்ட்டில் புகார் அளித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்நிலையில் கடந்த 5 மாதங்களுக்கு முன்பு சுரங்கம் அமைப்பதற்காக கருத்துக்கேட்பு கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

### ஒத்திவைப்பு

அப்போது ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக கருத்துக்கேட்பு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், இன்று (செவ்வாய்க்கிழமை) கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்பட இருந்த நிலையில், நிலம் கொடுத்த கிராம மக்கள் நேற்று உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட முற்பட்டனர். இதையடுத்து அவர்களை கலெக்டர் அலுவலகத்திற்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில், நிலம் கொடுத்த விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு உரிய இழப்பீட்டு தொகையை வழங்கிவிட்டு கருத்துக்கேட்பு கூட்டத்தை நடத்த வேண்டும் என்று பொதுமக்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டது. இந்த பேச்சுவார்த்தையின் முடிவில், கருத்துக்கேட்பு கூட்டத்தை ஒத்திவைத்து கலெக்டர் உத்தரவிட்டார். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.